**கட்டுவன பிரதேச சபை - 2023**

-------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடுவன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கடுவன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கடையறை ஒன்று மற்றும் குழாய் கிணறு ஒன்றின் கிரயமாகிய ரூபா 1,075,750 தொகை மற்றும் ரூபா 991,300 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | கடையறைக்கான செலவு நாட்குறிப்பு மூலம் சரி செய்யப்படும் எனவும் குழாய் கிணறு நிர்மாணவேலையின் செலவுகளில் காணப்படும் உபகரணங்கள் ஏதும் நிலையான சொத்துக்களுக்குள் உட்படுத்த தேவைப்படாது என. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டிற்காக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் மீளளிப்பு செய்ய முடியாத ரூபா 671,880 தொகை பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆளுனரின் அங்கீகாரம் பெற்ற பின்னர் நாட்குறிப்பு மூலம் இறுதிக் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெற வேண்டிய மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | வழங்கள் கடன்கொடுத்தோருக்காக ரூபா 163,375 தொகை குறைவாக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. | நாட்குறிப்புகள் மூலம் எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 ஆகஸ்ட் மாதம் முதல் 2025 ஆகஸ்ட் வரை 03 வருடங்களுக்காக வாடகைக்கு கொடுத்திருந்த நடமாடும் மீன் விற்பனை நிலையத்திலிருந்து கிடைத்திருந்த மொத்த வருமானமாகிய ரூபா 130,539 தொகை | நாட்குறிப்பு மூலம் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 86,859 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 5 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அதற்குரிய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டிருந்த மீதிகளிடையே ரூபா 591,980 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்ய வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் தபபா/பபாகொ/ 2010/01 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்) சுற்றறிக்கையின் பந்தி 4 | கடையறைகள் வாடகைக்கு கொடுத்த தினத்தில் அல்லது 06 மாதங்களுக்குள் உச்சமட்ட 06 தவணைகளின் கீழ் ஒரே தடவையில் செலுத்தும் பணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளின் போது வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த 10 கடைகளிலிருந்து பெற வேண்டிய ரூபா 9,534,333 இற்கான ஒரே தடவையில் பெறும் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 49,000 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக அறிவுரை பெற்றுக் கொள்வதற்கு முதலமைச்சுச் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் கிடைக்கும் அறிவுரையின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என. | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2023 ஜனவரி 27 திகதிய இலக்கம் 01/2023 கொண்ட பாதீட்டுச் சுற்றறிக்கையின் பந்தி 02 (இ)(viii) | பதவியணி உத்தியோகத்தருக்கு கடன் வசதிகள் வழங்குதல் மேற்கொள்ளப்படக் கூடாது எனினும் சபைச் செயலாளருக்கு ரூபா 187,500 இற்கான இடர்கடன் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. | சபைச் செயலாளரின் கோரிக்கையின் படி மீதியான இடர்கடன் தொகை வழங்கப்பட்டது என. | பாதீட்டுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 19,360,919 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 4,814,836 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,709,250 | 1,573,980 | 1,580,510 | 4,030 | 1,265,150 | 1,583,055 | 1,592,385 | 10,560 |
| வாடகை | 17,865,200 | 14,760,888 | 14,931,798 | 1,929,988 | 15,736,200 | 14,201,599 | 13,977,834 | 2,100,898 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,524,150 | 2,224,937 | 2,346,137 | 100,300 | 1,461,350 | 2,278,420 | 2,531,220 | 221,500 |
| ஏனைய வருமானங்கள் | 37,304,780 | 43,882,269 | 41,702,007 | 15,496,017 | 25,379,060 | 28,595,523 | 25,914,250 | 13,315,755 |
| மொத்தம் | 58,403,380 | 62,442,074 | 60,560,452 | 17,530,335 | 43,841,760 | 46,658,597 | 44,015,689 | 15,648,713 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 26 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 981,285 தொகையினை அறவீடு செய்வதற்கு பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 159(1) இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 165,900 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மீதியான நிலவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | வாகனங்கள் வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய வாடகை ரூபா 770,040 தொகை 03 டென்டர் ஆதனங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 98,124 தொகை மற்றும் நடமாடும் மீன் விற்பனை நிலையத்திலிருந்து கிடைக்க வேண்டிய வாடகை ரூபா 80,539 தொகை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உறுதிப்படுத்த முடியாத வாகனங்களுக்காக வாடகை இனங்காண்பதற்கு ஓட்ட அட்டவணைகளை பரிசோதனை செய்யப்படுகின்றது எனவும் டென்டர் மூலம் ரூபா 90,750 தொகை அறவீடு செய்வதற்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் மீதியான ரூபா 7,374 தொகையினை பதிவழிப்பதற்காக ஆளுனருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 23 திகதிய இலக்கம் 2312 கொண்ட வர்த்தமானிக்கு இணங்க நிரந்தர அறிவித்தல் பலகை ஒன்றிற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் ரூபா | அறவிடப்பட வேண்டிய தொகையில் ரூபா 8,000 அறவிடப்பட்டுள்ளதுடன் மீதித் தொகை அறவீடு செய்வதற்கும் | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 118,940 தொகை குறைவாக சிட்டையிடப்பட்டிருந்தது. | நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | |
| (ஈ) | 2023 ஆண்டின் போது காட்சிப்படுத்தப்பட்டிருந்த நாடளாவிய அறிவித்தல் பலகைகள் 06 அலகுகளை இனங்கண்டு கணிப்பீட்டு அறிக்கையில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் இழந்திருந்த வருமானம் ரூபா 77,580 தொகையாக காணப்பட்டது. | வருமானம் அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களின் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (உ) | பெற வேண்டிய நீர்க் கட்டணம் ரூபா 14,752,327 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 7,810,570 தொகை அறவிடப்படட்டுள்ளதுடன் மீதித் தொகையை அறவீடு செய்வதற்காக நீர்த் தொடர்புகளை துண்டிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஊ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 2,043,662 தொகை மற்றும் ரூபா 20,593,650 தொகையாக காணப்பட்டது. | பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணத்தொகையில் ரூபா 1,646,332 தொகை மற்றும் பெற வேண்டிய முத்திரைக் கட்டணத் தொகையில் ரூபா 6,758,668 தொகை கிடைத்துள்ளது என. | நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதி விளக்குகள் பௌதீக ரீதியாக பரிசோதனைகளின் போது ரூபா 142,780 தொகை பெறுமதியான 200W ப்ளேஷர் மின்குமிழ் பற்றாக்குறையாக இருந்ததுடன் 2018 ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை 11 அங்கத்தவர்களுக்கு அந்த 22 மின்குமிழ்களும் வினியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை திருப்ப ஒப்படைக்காமையால் இந்த பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. மேலும் 2022 ஆண்டின் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையில் இந்த மின்குமிழ் மீதி பேரேட்டின் படி மற்றும் உள்ளவாறான மீதி 56 என சமர்ப்படுத்தி காட்டியிருந்தமையால் பண்டக் கணிப்பீட்டு | ஒரு மக்கள் பிரதிநிதி 02 ப்ளேசர் மின்குமிழ்கள் ஒப்படைத்து இருந்ததுடன் செயற்படாத 27 ப்ளேஷர்கள் 2023 பண்டக் கணிப்பீட்டு பரிந்துரையின் படி ஏல விற்பனை மேற்கொள்ளப்பட்டது என. | பண்டக் கணிப்பீட்டு சபை உத்தியோகத்தர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபை உத்தியோகத்தர் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சபையினால் அனுபவித்து வரும் 16 காணிகள் மற்றும் கட்டிடங்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகளை உரித்தாக்குவதற்கு தேவையான தொடர்நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்திட்டங்கள், கருமங்கள் அல்லது மூலதன வேலைகள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டில் செயற்படுத்துவதற்கு வருடாந்த பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 1,163,063 தொகைக்கான 03 அபிவிருத்தி திட்டங்கள் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்த வேலையை நிறைவேற்றுவதற்கு முடியாது என ஒப்பந்தக்காரர்கள் அறிவித்துள்ளது என. | பாதீட்டு மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6.1(அ) பிரிவின் படி பெறுகை மேற்கொள்வதற்குள்ள பண்டங்கள் அல்லது வேலைகளுக்காக விவரக் குறிப்புக்கள் குறிப்பிட்ட பெறுகைக் குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு தேவையான எண்ணிக்கையை விட சுருக்கமான முறையில் விபரிக்கக் கூடாதிருந்த போதிலும் கூட்டுப் பெறுமதி ரூபா 1,451,800 தொகைக்கான கொள்வனவுகள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி தற்போது கொள்வனவு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்காக கூட்டுப்பெறுமதி ரூபா 604,998 இற்கான 02 வாயுசீராக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்குரிய தொழிநுட்ப மதிப்பாய்வு குழு அறிக்கையில் நியாயமான விலை விவரக் குறிப்புகள் மாத்திரம் கவனத்தில் எடுக்கப்பட்டிருந்ததுடன், உத்தரவாத காலம், வகை, உற்பத்தி நாடு ஆகிய முக்கியமான விவரக் குறிப்புக்களுக்கு கவனம் செலுத்தாமல் பரிந்துரை வழங்கியிருந்தமையால் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 2.6(அ)(ii) படி செயற்பட்டிருக்கவில்லை. | 02 வாயுசீராக்கி இயந்திரங்கள் உரிய முறையில் பொருத்தப்பட்டு இருப்பதனால் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரையின் படி கொடுப்பனவு செய்யப்பட்டது என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 2.8.1 (அ) இன் படி ஏதேனும் அங்கத்தவர் ஒருவர் பெறுகைக் குழு மற்றும் ஏனைய | பெறுகைக் குழுவுடன் தொடர்பற்ற அங்கத்தவர் ஒருவர் தொழிநுட்ப | பெறுகை வழிகாட்டல் கோவையின் |

| | | |
|---|---|---|
| மதிப்பாய்வுக் குழு ஆகிய இரண்டு குழுக்களிலும் அங்கத்தவர்களாக இருக்க முடியாது எனினும் அவ்வாறு மேற்கொள்ளாமல் கூட்டுப்பெறுமதி ரூபா 1,952,498 இற்கான இரண்டு கொள்வனவுகள் தொடர்பாக நியமனம் செய்யப்பட்ட தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அங்கத்தவர் ஒருவர் பெறுகைக் குழுவிலும் அங்கத்தவராக செயற்பட்டிருந்தார். | மதிப்பாய்வுக் குழுவிற்காக நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பான வீதிகளை கொங்கிரீட் பண்ணுவதற்காக பயன்படுத்த வேண்டிய பாதை ரேட் பதிவேட்டில் ST-047 ரேட்டை பயன்படுத்தாமல் வேறொரு ரேட் ஒன்று பயன்படுத்தி இருந்தமையால் ரூபா 342,485 தொகை மிகையாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ST-048 ரேட்டை பயன்படுத்துவதன் மூலம் பாதைகளின் நிலைத்திருக்கும் தன்மை அதிகரிக்கின்றது என. | பாதை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்த வேண்டிய ரேட்டினை பயன்படுத்தி கொடுப்பனவு செய்ய வேண்டியதுடன் ஏனைய ரேட்டுகளை பயன்படுத்தி கொடுப்பனவு செய்ய முடியாது என. |
| (ஆ) | 04 பாதைகளை கொங்கிரீட் பண்ணும் நிர்மாண வேலைச் செயற்திட்டங்கள் தொடர்பாக பாதைகள் 06 அங்குல கனத்தில் கொங்கிரீட் பண்ண வேண்டும் என கொங்கிரீட் பண்ணும் வேலை விடயத்திற்காக ரூபா 3,502,703 தொகை கொடுப்பனவு செய்திருந்த போதிலும் 06 அங்குல கனத்தில் கொங்கிரீட் பண்ணப்பட்டது என பரிசோதனை அறிக்கை ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தாமல் முழுத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | தொழிநுட்ப சேவை உத்தியோகத்தர்களின் முழுமையான மேற்பார்வை மீது நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டது என. | பாதைகளின் கனம் பரிசோதனை அறிக்கை ஒன்றின் மூலம் உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி முறையே 96 மற்றும் 111 ஆகக் காணப்பட்டமையால் 09 பதவிகளுக்குரிய 33 மிகைகளை முறைப்படுத்திக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 15 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மிகையாக காணப்படுவதுடன், அந்த பதவிகளை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உட்படுத்துவதற்காக வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பதவியணி மிகைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.6 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்திரத்தின் நிபந்தனை இலக்கம் 03 இன் படி திண்மக் கழிவுப் பொருட்களில் காணப்படும் பிளாஸ்டிக், பொலிதீன், கடதாசி, கண்ணாடி மற்றும் இரும்பு வேறாக வகைப்படுத்தி அவற்றை மீள்சுழற்சிக்காக குறிப்பிட்ட நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டியதுடன் அவ்வாறு அனுப்பும் வரை பொருத்தமான இடமொன்று காற்றினால் எடுத்துச் செல்ல முடியாதவாறு மற்றும் மழை நீரினால் நனையக்கூடாதவாறு முறைப் பிரகாரம் களஞ்சியப்படுத்தி வைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | களஞ்சிய வசதிகள் காணப்படாமை இந்த நிலைமைக்கு காரணமாக இருந்ததெனவும் எதிர்காலத்தில் களஞ்சிய வசதிகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனையின் படி செயற்பட வேண்டும். |